13th August 1960]

Introduction of Tamil medium in Colleges

* 180-D Q.—SRI P. G. MANICKAM : கனம் நிதியமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கல்லூரிகளிலே தமிழில் பாட போதனை நடத்தவிருக்கும் ஆசிரியர்களுக்கு குறுகிய கால பயிற்சி வகுப்பு ஒன்று கோயம்புத்தூரிலிருக்கும் சர்க்கார் கலைக் கல்லூரியில் நடைபெற்றதா ?

(ஆ) அப்படியாயின், எத்தனை ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது ?

(இ) எந்த விதமான பயிற்சி கொடுக்கப்பட்டது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) to (c) கல்லூரிகளில் தமிழிலே பல்வேறு பாடங்களை கற்பிப்பது சம்பந்தமாக 45 ஆசிரியர்களுக்கு தமிழிலே கற்பிக்கும் புதுமுகப் பயிற்சி கொடுக்கப்பட்டது. இது சம்பந்தமாக திட்டத்தின் நகல்[a] சபைமுன் வைக்கப்பட்டுள்ளது.

SRI P. G. MANICKAM : மேற்கண்ட ஆசிரியர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்பட்டபோது கல்லூரித் தமிழ்க் குழு வெளியிட்ட அகராதியின் வார்த்தைகள் திருத்தப்பட்டனவா ? அப்படித் திருத்தப்பட்ட வார்த்தைகள் அந்த அகராதியில் இருந்து நீக்கப் பட்டு விட்டனவா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தப் பதங்கள் எல்லாம் அப்போது ஆராயப்பட்டனவா என்ற விவரம் இல்லை.

SRI M. KALYANASUNDARAM : இந்த ஆசிரியர்கள் யாரிடத்தில் எவ்வாறு பயிற்சி பெற்றனர் ? இவர்களுக்குப் பயிற்சி கொடுக்க புஸ்தகங்கள் தமிழிலே தயாரிக்கப்பட்டனவா ? அப்படியில்லையாயின் கைக் குறிப்புகளாவது தமிழிலே கொடுக்கப் பட்டனவா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : மாணவர்களுக்கான புஸ்தகங்கள் எல்லாம் அச்சாகி விட்டன. இந்தத் திட்டமானது தமிழிலே சொல்லிக் கொடுப்பதற்குப் பயிற்சி பெறுவதற்காக புஸ்தகம் இல்லாவிட்டாலும் விஷயத்தைத் தெரிந்திருந்தால் தமிழிலே சொல்ல முடியுமா என்பதைப் பொறுத்துத்தான் அங்கு கவனித்து பயிற்சி கொடுக்கப்பட்டது. வெகு சுலபமாகத் தமிழிலே சொல்லிக் கொடுக்க முடியும் என்ற உற்சாகத்தை அவர்கள் அடைந்திருக்கிறார்கள். இந்த அறிக்கையில் 11-வது பக்கத்தைப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதிலே, முக்கியமாக, ஆங்கிலத்தினுடைய தரம் கெட்டுப் போகாமல் இருக்க என்னென்ன வழிவகைகள் செய்யவேண்டுமென்பதை பற்றியும் குறிப்பாகக் கவனிக்கப்பட்டிருக்கிறது.

SRI P. G. MANICKAM : எந்தெந்தப் பாடப் புஸ்தகங்கள் இப்போது தமிழில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : எந்தெந்த பாடங்கள் தமிழிலே கற்பிக்கப்பட வேண்டுமோ அதையெல்லாம் தமிழிலே மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன.

---

[a] Printed as Appendix II on pages 189–198 infra.

[13th August 1960

SRI K. VINAYAKAM : Sir, since the introduction of the regional language in the B.A. standard in the Arts College, Coimbatore, special tact and capacity are required to handle the subjects in the regional language for which the lecturers are qualified as was stated by the Hon. Minister. Is there any proposal to give remuneration according their qualifications, i.e., their unusual capacity when compared to the status of the lecturers, who are handing the subjects in English language?

THE HON. SRI C. SUBRAMANIAM : No unusual capacity is required. With their natural capacity they are able to express in their own mother-tongue.

MR. SPEAKER : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—INCORRECT REPORT OF ASSEMBLY PROCEEDINGS IN THE PRESS

SRI M. KALYANASUNDARAM : கனம் சபாநாயகர் அவர்களே, நேற்றைய தினம் கனம் அங்கத்தினர் திரு. சின்னதுரை அவர்கள் ஒரு உரிமைப் பிரச்சினையை இங்கு கொண்டுவந்திருப்பதாகத் தாங்கள் அறிவித்தது ஞாபகம் இருக்கும். அது சம்பந்தமாக வெளியிட்டிருக்கும் செய்தியில் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' என்ற ஆங்கிலப் பத்திரிகை கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறது :

"The Speaker said that Sri M. Kalyanasundaram (Communist) had raised a similar privilege issue over Mr. Adityan's arrest which he (Speaker) had stated would be taken up on August 18."

இது சம்பந்தமாக நிலைமையைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

MR. SPEAKER: வேண்டியதில்லை.

SRI M. KALYANASUNDARAM: அதைப்பற்றி உரிமைப் பிரச்சினை எதுவும் கொண்டுவரவில்லை. தங்களிடத்தில் கேட்கவும் இல்லை. இந்த 'ஆதித்தன் அவர்கள் அரெஸ்ட்' சம்பந்தமாக, அவர் கொண்டிருக்கும் குறிக்கோள் சம்பந்தமாக, அவர் மேற்கொண்டிருக்கும் இயக்கம் சம்பந்தமாக, எனக்கு எந்தவிதமான அனுதாபமும் கிடையாது. துரதிருஷ்டவசமாக, என்னுடைய பெயரை அவரோடு இணைத்திருப்பதே அரசியல் குந்தகம் விளைவிக்கக் கூடியது என்பது என் அபிப்பிராயம்.

Mr. Speaker rose . . .

SRI M. KALYANASUNDARAM: தயவு செய்து ஒரு நிமிஷம்.

MR. SPEAKER : திரும்பத் திரும்பச் சொல்லி என்ன லாபம்? அந்தப் பத்திரிகையில் அப்படி வெளியிட்டிருப்பது தவறு என்பது எனக்கு மாத்திரமல்ல, சபை பூராவுக்கும் தெரியும். பத்திரிகை ஆசிரியரைக் கூப்பிட்டு ஒரு திருத்தம் கொடுக்கச் சொல்கிறேன். 'திருத்தம் கொடுக்கமாட்டேன்' என்று சொல்லி விட்டால், பிறகு உரிமைப் பிரச்சினை எழுப்பலாம்.